முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1374

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

04.07.2023, செவ்வாய்கிழமை

1. அறமெனும் மகா சக்தியாக
அகிலமெங்கும் ஆற்றல்பரப்புகின்ற
சரவணச் சுடராக உலகோர்க்கு
சகலதும் ஞானமாக அருளுகின்ற
2. அருளுகின்ற ஆறுமுக அரங்கனே
ஐயனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
வரமென ஞான அறிவுரை ஆசி
வழங்குவேன் சோபகிருது மிதுனத்திங்கள்
(சோபகிருது வருடம் ஆனி மாதம் 19 ம் நாள், 04.07.2023, செவ்வாய்கிழமை)
3. திங்களிலே அரங்கன் சக்தி
தெய்வீக உயர் சக்தியாக
ஓங்காரம்பட உலகமெல்லாம் பரவியிருக்க
ஓங்காரக்குடில் நோக்கி உலகோர் வந்தாலே போதும்
4. போதுமப்பா அனைவருக்கும் ஞானபலம்
புண்ணியத்தோடு கூடிய அருள்பலமும்
தானாக அரங்கன் கரம்பட
தவநூல் தீட்சை வடிவாக
5. ஆகவே அனைவருக்கும் சித்தி கண்டு
ஆற்றலாக உலகில் ஞானம் பெருகும்
பெருகவே அரங்கன் பிசகின்றி
பேர் உலகை நோக்கி கருணைகொண்டு
6. தர்மத்தை வளர்த்து வருவதாலே தரணியோர் ஆங்காங்கே இயன்ற தர்மம்
தவராஜன் பேரில் செய்துகொண்டு வருக
வருகவே வையகத்தில் மாற்றம்
வளர்ச்சித்தரும் உண்மை ஞான ஆட்சிக்காலமாக

7. ஆறுமுகனார் யான் நிலைப்படும் வண்ணம் இனிதே
அகிலத்தில் அற்புதத்தை நடத்தி அருள்வேன்
அருளவே அரங்கனே கலியின் ஆற்றல்மிக்க சிறந்த ஞானி
பெருமைதனை உணர்ந்து உலகமக்கள் பிரணவக்குடில் நோக்கி சரணடைந்தால்

8. அடைந்தகணமே அவரவர்க்கும்
அழியாமை என்பது இலகுவாகும்
தடையற இனி பிறவாத பேறு
தவராஜனைக்கொண்டே யாவர்க்கும் சித்தியாகும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—